**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 36/2021 |
| Name | : Balaji |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நீலம்பூரில் வசித்து வருகிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது அண்ணன். 23.03.2021ம் தேதி இரவு 10.30 மணிக்கு நானும் எனது அண்ணன் இளவரசுனும் மடத்துக்குளம் வந்து பெட்ரோல் வாங்கிவிட்டு சர்ச் ஃபாதர் வண்டியில் வந்து எனது அண்ணன் வண்டியில் பெட்ரோல் ஊற்றிவிட்டு சர்ச்சிற்கு ஃபாதர் வண்டியில் எனது அண்ணனும், எங்கள் வண்டியில் நானும் சென்று கொண்டிருந்தோம் சர்ச்சிற்கு முன்பு உள்ள முச்சந்தி அருகில் எனது வாகனம் நின்றுவிட்டது அப்போது 1ம் எதிரி கரண் என்னை யார் எதற்கு வந்தே என்று பேசிக்கொண்டிருந்தார், யுவராஜ் என்பவர் என்னிடம் வம்பிழுத்தார் அதை கேட்க எனது அண்ணன் வந்தார் கேட்பதற்கு முன்பே கரண் மற்றும் யுவராஜ் எனது அண்ணனை கல்வை வைத்து அடித்துவிட்டார்கள். எனது அண்ணனுக்கு தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. அவர்கள் இருவரும் சென்று மற்ற இருவரை அழைத்து வந்தார்கள் எனது அண்ணன் சர்ச்சில் இருக்கும்போது அவர்கள் நால்வரும் chair–யை எடுத்து முதுகில் அடித்தார்கள் அதில் ஒருவர் சில்வர் போசியை எடுத்து எனது அண்ணன் தலையில்

வீசினார் அதில் எனது அண்ணனுக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதை பார்த்த சர்ச் ஃபாதர் அவரது மனைவி மற்றும் நாங்கள் தடுத்தோம். உடனே எதிரிகள் ஓடிவிட்டார்கள். ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது அண்ணனை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 36/2021

Name : Azhagumuthu

P.W. : 5

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தெற்கு கண்ணாடிப்புத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். டெய்லராக வேலை செய்கிறேன். 23.03.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு கண்ணாடிப்புத்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள டீ கடைக்கு வந்தேன் அப்போது அங்கே உள்ள முச்சந்தியில் போலீசார் விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் ஆனந்தன் என்பவர் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்